தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைத்துறை க(ம)ப. கடலூர் கோட்டம்.

ந.க.எண். 1957/2025/ஆ1 நாள். 16.10.2025

# வேலைவாய்ப்பு அறிக்கை

(அரசாணை எண். 44, தொழிலாளர்(ம) வேலைவாய்ப்பு (T2) துறை நாள். 11.03.2015 இன் கீழ் வெளியிடப்படுகிறது.)

கடலூர் (நெ)க(ம)ப கோட்ட அலகு எல்லைக்குட்பட்ட அலுவலகங்களில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலக காவலர் (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) பணியிடத்திற்கு கடலூர் மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | காலிப்பணியிடங்கள் | ஒதுக்கீடு விவரம் | தகுதிகள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் 5 எண்ணிக்கை (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) | ஆதிதிராவிடர் | 1 | வயது: 01.10.2025 அன்று | 18-37 |
| | | | 2 | கல்வித் தகுதி | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | அலுவலக காவலர் 4 எண்ணிக்கை (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) | | 3 | ஊதிய விகிதம் | ரூ.15700 - 58100 (நிலை 1) |

**நிபந்தனைகள் :**

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது. கல்வித்தகுதி, சாதி, மற்றும் இருப்பிட முகவரி போன்ற சுயவிவரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச்சான்றிதழ் மற்றும் 2-அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து மேற்குறித்த பதவிகளுக்கு தனித்தனியே பதவியின் பெயரினை குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ/ படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ தபால் மூலமாகவோ 15.11.2025 பி.ப 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (call letter) தெரிவிக்கப்படும்
4. பணிமிடங்களுக்கு தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை,**
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,**
சில்வர் பீச் ரோடு, கடலூர் - 607 001.
அலுவலக தொலைபேசி - 04142 294555
அலுவலக மின்னஞ்சல் - tndehcmcuddalore@gmail.com

**கோட்டப் பொறியாளர் (நெ),**
க(ம)ப, கடலூர்.

வெ.ஆ.எண்.127/2025/செ.ம.தொ.அ./கடலூர் மாவட்டம்/ நாள்:16.10.2025